
தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்



தேவகிருபையும் சத்தியமும் Sal 85 APR '09

Priorities

85 சங்கீதம்

தேவகிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்

உமது தேசத்தின் மேல் பிரியத்தை அன்பாக வைத்து
யாக்கோபின் சிறையிருப்பை நீர் திருப்பினீர்
உமது ஜனத்தின் அக்கிரமத்தையெல்லாம் மன்னித்து
அவர்கள் செய்த பாவத்தையெல்லாம் நீர் மூடினீர் (தேவ)

உமது உக்கிரகோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டீர்
உமது கோபத்தின் எரிச்சலைவிட்டு நீர் திரும்பினீர்
உமது ஜனங்கள் உம்மில் மகிழ உயிர்ப்பித்திடுமே
உமது கிருபையால் எங்களுக்கு இரட்சிப்பை அளியுமே (தேவ)

உம்முடைய ஜனங்களுக்கு சமாதானத்தை கூறுகிறீர்
உம்முடைய பரிசுத்தர்களுக்கு சமாதானத்தைக் கூறுகிறீர்
அவர்களுடைய மதிகேட்டிற்குத் திரும்பாதிருக்கச் செய்யும்
அவர்கள் மேலுள்ள உமது கோபத்தை ஓயப்பண்ணிடும் (தேவ)

எங்கள் தேசத்திலே தேவமகிமை என்றென்றும் நிலைக்கட்டும்
கர்த்தருக்கு பயந்தவர்க்கு இரட்சிப்பு சமீபத்திலும்
தேவன் தாமே அவர்களுக்கு நன்மையானதைத் தந்திடுவார்
எங்களது தேசமும் அதன் பலனைக் கொடுத்திடும் (தேவ)

எங்கள் தேசத்திலே தேவகிருபை என்றென்றும் நிலைக்கட்டும்
தேவநீதி கர்த்தருக்கு முன்னாகச் செல்லட்டும்
கர்த்தருடைய அடிச்சுவடுகளின் வழியில் எங்களை நடத்திடும்
கர்த்தராகிய தேவனின் விளம்புதலைக் கேட்டிடுவேன் (தேவ)

Doubt whom you will, but never doubt yourself.

